# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,133 — 1935 ம் ௵ ஆடிமீ 12 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

வேலையாட்கள் காரியப்பகுதி.

இந்திய வேலையாட்களைப்பற்றிய 1927 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சட்டம்.

164 ம் இலக்க விளம்பரம்.

கண்டி அரசிறை வருமானப் பகுதியாரால் தீர்மானித்து B இடாப்பில் குறிக்கப்பட்டிருக்கிற ஆகக்குறைந்த வீதச் சம்பளங்களை இந்தியாவிலிருந்து வந்து குடியேறும் வேலையாட்களைக்குறித்த காரியங்கள் பார்க்கும் சங்கத்தாரால் நியமிக்கப்பட்டபின் இலங்கை இராச்சிய மந்திரசபை சம்பந்தமாக 1931 ம் ஆண்டில் ஆலோசனைச் சபையில் செய்த கட்டளையின் 93 ம் அம்சத்தினால் தம்மீது வைக்கப்பட்ட தத்துவத்தைக்கொண்டு தேசாதிபதியவர்கள் அச்சட்டத்தின் 10 ம் பிரிவின்படி அங்கீகரித்திருக்கிறார்கள்.

தேசாதிபதியவர்கள் கட்டளைப்படி,
பெரி சுந்தரம்,
வேலையாட்கள் கைத்தொழில்
வர்த்தககருமங்களினது மந்திரி.

கைத்தொழில் வர்த்தக
கருமங்களினது மந்திரியின ஊழியம்,
கொழும்பு, 1935 ம் ஆண்டு ஜுலைமீ 12 ந உ.

A இடாப்பு.

குறிக்கப்பட்ட பிரிவுகள் :—

(a) நுவரெலியா அரசிறை வருமானப்பகுதியைச்சேர்ந்த கங்கபலாத்தைக் கோறளை, டயத்திலக கோறளை, கன்னுவ கோறளை, கொகாககா கோறளையும்.

(b) நுவரெலியா அரசிறை வருமானப் பகுதியைச் சேர்ந்ததும் படியபெலெல்லாவையிலிருந்து எல்ல முல்லாவுக்குப் போகும தெருவின் மேற்குப் பக்கமாகவும், இன்னும் கல்பெலெல்ல கிறுக்கின் குறிப்பு ஸ்தானத்துககும், குறுஅத்தேகந்தையின் குறிப்பு ஸ்தானத்துக்கும் வடமேற்கிலிருந்து தென்கிழக்காய் ஒடி மண்டாரநுவரை தோட்டத்தையும், குட்லூட் தோட்டத்தையும் குறிக்கும் கீறறுக்குட்பட்டதுமான உடகம்பகா கோறளையும்.

B இடாப்பில் அமைக்கப்பட்ட வீதங்களை சொலலப்பட்ட குறிச்சிகளுககு விதிக்கும் பொழுது.—

(a) ஏணெஸ்ற் வலி உட்பட கங்குறன்கேத்தைக்குரூப்பை மத்திய நாட்டுத் தோட்டமாகவும்,

(b) மற்றெலலாத்தோட்டங்களை மேல்நாட்டுத் தோட்டங்களாகவும் பாவிக்கப்படும்.

B இடாப்பு.

நியமிக்கப்பட்ட ஆககுறைந்த வீதச் சம்பளங்கள்.

(1) A இடப்பில் அடங்கிய மேல்நாட்டுத் தோட்டங்களுக்கு ஆணுக்கு 49 சதமும், பெண்ணுககு 39 சதமும், பிள்ளைக்கு 29 சதமும்.

(2) A இடாப்பில் அடங்கிய மத்தியநாட்டுத் தோட்டமொன்றுககு ஆணுக்கு 43 சதமும், பெண்ணுக்கு 35 சதமும், பிளளைககு 25 சதமும்.

---

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பட்டதுவ என்னுமிடத்தில் புதிய அரசினர் பாடசாலை கட்டுதல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 220. குறிச்சி—பட்டதுவ.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று ப. |
|---|---|---|---|---|
| 2 | வெலிவத்தை .. | 17 தென்னை, 3 கமுகு, 1 பலா, 1 டெல், 1 கிதுள் (30 வருஷம்), 10 கமுகு 1 மா, 1 பிலிங், 1 நாவல், 1 வெராபு, 1 அன்னவுண்ணு (5–10 வருஷம்) உள்ள தென்னந்தோட்டம் | (1) கே. டபிள்யு. குணவர்தன, பட்டதுவ, (2) டபிள்யு. பீ. ரேகிறிஸ் முதலாளி, கும்பல்வெல்லை | 0 1 10·5 |

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 3 | வெலிவத்தை .. | 1 ஈரப்பலா, 1 நாவத்தை (10 வருஷம்) உள்ள தென்னந்தோட்டம் | (1) வை. ஆர். ரேசஹாமி, (2) கே. பீ. சிறிசேன, (3) கே பீ. ஈசன், (4) கே. பீ. சாமி, (5) றெவ. ரீ. சங்கானந்த குரு, பட்டதுவ | 0 0 1·2 |
| 4 | ஷை .. | கட்டப்பட்ட கிணறும், ஒரு கட்டடத்தின் பகுதியும் அடங்கிய தென்னந்தோட்டம் | ஷை .. | 0 0 2·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக கற்பனை செய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1935 ம் ஹூ (ஆகஸட்) ஆவணி மாசம் 12 ந் தேதியிலன்று 10 மணிக்கு காலி கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1935 ம் ஹூ (ஜூலை) ஆடிமீ 9 ந் உ.

டபிள்யு. டீ. குணறற்ன,
உப அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் யலகமளல 42½ (மைல்) கட்டையடியில் கொழும்பு காலிப் புகைரதப்பாதையை பெருப்பித்தல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 280. குறிச்சி—கைக்கவல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 2 | கபுன்கொடவத்தை | 1 தென்னை 40 வருஷமும், 3 தென்னை 35 வருஷமும், 1 தென்னை 2 வருஷமும், மண்ணுலமைத்துக்கிடுகால் வெய்நத பாண்போறணையின் ஒரு பாகம், புதிதாய் வெட்டிய யலகமளலாவின் பாகம் இவையுள்ள தென்னந் தோட்டம் | (1) டீ. டபிள்யு. வெலத்தாந்திரி, (2) டொன் அதி வெலத்தான்திரி, (3) டீ. எஸ். வெலத்தாந்திரி, (4) டீ. எஸ். அமரசேகரா, (5) டொ. கு. விஜயசுந்தர, (6) பீற்றர் சேனநாயக, (7) றிச்செட் சேனநாயக, (8) லுவிஸு சேனநாயக, (9) ஹெலனு சேனநாயக, (10) அல்டிரு சேனநாயக, (11) அலசாந்திரகே பொடிதன், (12) டீ. எஸ். அமரசேகரா, (13) கே. எயினிஸ், (14) டபிள்யு. பொடிநோனு, (15) எச். கே. சர்னேலிஸ், (16) கொ. டீ. ஜோயித், (17) டபிள்யு. ஜீ. டொ. எட்வின், (18) பீ. டீ. ஜூயிற், கைக்காவல, (19) ஏ. டீ. எஸ். பெரேரு கொழும்பு, (20) றஜகே டொ. அ. கொழும்பு | 0 0 4·9 |
| 3 | ஷை .. | 12 தென்னை 40 வருஷம், (வெட்டப்பட்டன), 7 தென்னை 35 வருஷம், புதியயலகமளலாவின் பாகம் உள்ள தென்னந் தோட்டம் | ஷை<br>டபிள்யு. ஜீ. டொ. கரேருலிஸ், கைக்காவல | 0 1 0·9 |
| 4 | டொம்பகஹாஒவித்த | 1 தென்னை 15 வருஷம், 8 தென்னை 12 வருஷம், 1 தென்னை 3 வருஷம், புதிய யலகமளலாவின் பாகமும் உள்ள தென்னந்தோட்டம் | (1) அலசந்திரகே பொடிதன் அப்புஹாமி, (2) டொன் ஹிமார விஷயசுந்தர, (3) கொர்னேலிஸ் டீ ஜொயித், (4) டொ. பிரலதினு வேலரத்ன, (5) அலிசாநதிரிகே பொடிசிஙகோஅப்பு, (6) அலிசாந்திரிகே கென்டிஅப்பு, (7) அலிசாந்திரிகே பாலப்பு, (8) அலிசாந்திரிகே கொரதிரிக் சிங்கோ, (9) அலிசாந்திரிகே சுடப்பு, (10) அலிசாந்திரிகே அலெக்சாண்டர், (11) கொட்டாச்சிகே பொடிசிங்கோஅப்பு (12) கொட்டாச்சிகே சிங்கோஅப்பு, (13) கொட்டாசசிகே டிடிசிங்கோ, (14) ஏச். ஏ. ஜயனேரிஸ், (15) ஏச். ஏ. நோரிஸ், (16) ஏச். ஏ. பிச்சோறிஸ், (17) ஏச். ஏ. நன்டோரிஸ், (18) ஏச். ஏ. பபாசிஞ்ஞோ, (19) கே. கே. கழுமகாத்மையா, (20) ஏச். ஏ. வாறன், (21) ஏச். ஏ. சாளிஸ், (22) ஏச். ஏ. டாவித்சிஞ்ஞோ, (23) டபிள்யு. கே. பொடிசிஞ்ஞோ கன்னங்கரா, (24) ஏ. கன்னங்கரா, (25) ஏ. டொ. ஜிமாரு, கைகாவல | 0 0 18·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம்நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1935 ம் ஹூ (ஓகஸ்ற்) ஆவணி மாசம் 9 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு வெங்தோட்டை வாடியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின்தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1935 ம் ஹூ (ஜூலை) ஆடிமீ 8 ந் உ.

டபிள்யு. டீ. குணறற்ன,
உப அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஒளிமுள்ளை ரோட்டில் இருந்து தாவபான்சாலை ரோட்டுக்குச் சேர இருபது அடி ரோட்டுக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 404. குறிச்சி—வேலபுரகல்த்துறை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 25 | 3ம் டிவிஷன் தாவபான் சாலை வரிப்பணம் நொம்பர் 6 வதின் பாகம், ஆராச்சியா வத்தைபாவுலவிற்ற | 20 முதல் 40 வருஷம்சென்ற தென்னைமரங்கள் 9 ம், 10 வருஷம் சென்ற தென்னைமரங்கள் 2 ம், 10 ல் இருந்து 18 வருஷம் சென்ற 14 பாக்கு மரங்களும், 3 வருஷம் சென்ற 8 பாக்குமரங்களும், 40 வருஷம் சென்ற திப்பிலி பனைமரம் 1 ம், 15 வருஷம் சென்ற மாமரம் 1 ம், 20 வருஷம் சென்ற ஜம்புமரம் 1 ம், 15 வருஷம் சென்ற றமுட்டான்மரம் 1 ம், 3 வருஷம் சென்ற நாமரம் 1 ம், 20 வருஷம் சென்ற றட்டகொறக்காமரம் 1 ம், அமரலை மரம் 1 ம், 8 வருஷம் சென்ற கொட்டம்மரம் 1 ம், அடங்கிய தோட்டம் | வேலபுரகல்துறையில் இருக்கும் கஸ்தூரி படாலைகே உதேனிஸ்காமி | 0 0 8·9 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிககு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1935 ம் ஸ்ரீ (ஒகஸ்ட்) ஆவணி மாசம் 13 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு களுத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1935 ம் ஸ்ரீ (ஜுலை) ஆடிமீ 9 ந் உ.

ஜே. லைற்,
உதவி அரசாட்சி ஏசண்டு, களுத்துறை.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பழைய ரோட்டுக்கும் ஒளிமுள்ளை ரோட்டுக்கும் சேரும்படியாக 20 அடி ரோட்டு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 404. குறிச்சி—வேலாபுரை, களுத்துறை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 38 | 3 ம் டிவிசன் வரிப்பணம் நொம்பர் 180 ன் பாகம் ரதாகேவத்தை | 15 ல் இருந்து 40 வருஷம் சென்ற 11 தென்னைமரமும், 5 வருஷம் சென்ற தென்னைமரம் ஒன்றும், 5 ல் இருந்து 15 வருஷம் சென்ற 9 பாக்குமரமும், 1 வருஷம் சென்ற 4 பாக்குமரமும், 2 வருஷம் சென்ற 7 மாமரமும், 3 வருஷம் சென்ற 5 கொடப்பறை மரமும், 15 வருஷம் சென்ற ஈரப்பிலாமரம் ஒன்றும், 3 வருஷம் சென்ற ஈரப்பிலாமரம் இரண்டும், 1 ல் இருந்து 5 வருஷம் சென்ற 19 சப்புமரமும், 8 வருஷம் சென்ற 6 மங்கூஸ்மரமும், 8 வருஷம் சென்ற 2 சப்போதில்லாமரமும், 1 வருஷம் சென்ற 3 ஜம்புமரமும், 3 ல் இருந்து 5 வருஷம் சென்ற கிராம்புமரம் இருபதும், 2 வருஷம் சென்ற அம்பில்லைமரம் ஒன்றும், 8 வருஷம் சென்ற புன்னைமரம் ஒன்றும் அடங்கிய தோட்டம் | வேலாபுர களுத்துறையில் இருக்கும் உகவத்தை ஆசாரிகே ரோமானிஸ் ஜயசுந்தரவும் பட்டியா பாவுலகே டொன் தோமாஸ் சிங்கோவும் | 0 0 19·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1935 ம் ஸ்ரீ (ஆகஸ்ட்டு) ஆவணி மாசம் 13 ந் தேதியிலன்று 10 மணிக்கு களுத்துறை கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1935 ம் ஸ்ரீ (ஜுலை) ஆடிமீ 9 ந் உ.

ஜே லைற்,
உதவி அரசாட்சி ஏசண்டு, களுத்துறை.

---

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

இத்தாலறிவிப்பது வடமாகாண ஏசண்டர் அல்லது உதவி ஏசண்டரால் யாழ்ப்பாணக் கச்சேரியில் பின்னுற் சொல்லப்படும் துறை ஆயககுத்தகை 1935 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1936 ம் ஆண்டு புரட்டாதி மாதம 30 ந் திகதி வரைக்கும் விலைக்கு வாங்குவதற்கான முத்திரயிடப்பட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் 1935 ம் ஆண்டு ஆடிமீ 26 ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி யளவில் ஏற்கப்படும்.

(1) பண்ணைத்துறை (2) அராலித்துறை
(3) காரைதீவு.

2. ரூபா 50 கச்சேரியில் அல்லது திறைசேரியில் கட்டிய தற்கு அத்தாட்சியாக பெற்றுககொண்ட றீசீட்டுடன ஒப்பந்தப் பத்திரங்கள் கேள்விககாரரால் நேரே கொடுபட வேண்டும். கேள்விக்காரன் அல்லது விலைவைப்போன் தனது கேள்வியின்படி துறை ஆயககுத்தகை விலைக்குக் கொடுக்கப்படுமென்று தீர்மானித்தவுடன் கேள்வித்தொகையின் பததிலொருபங்கைக் கட்டவும் விற்பனவு நிபந்தனைகளுக்குக் கையொப்பமிடவும், அல்லது தேவையென்று காணும் பிணையைக் கேட்கும் நேரம் கொடுக்கவும் தவறினுல் ஒப்பந்தக் கேள்விக்காகக் கட்டிய பணமும் கேள்வித் தொகையின் பததிலொருபங்கின்பேரால் கட்டிய பணமும் இழந்துபோவதுமன்றி தனது பெயரையும் குத்தகைப் பொருத்தங்களின்படி செய்யாத தவறியவர்களின் இடாப்பிலும் பதிவுசெய்வதற்கு ஏதுவாகும். ஒப்புக்கொள்ளப்பட்ட கேள்விக்காரன் அல்லது விலைவைப்போன் விற்பனவு நிபந்தனைகளுக்குக் கையெழுத்திட்டபின் கேள்விக்காரர் கட்டிய பணம் திருப்பிக் கொடுக்கப்படும். தபால் மார்க்கமாக அனுப்பப்படும் கேள்விப்பத்திரங்களும் குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திறகுப் பின் கிடைக்கும் கேள்விப்பத்திரங்களும் கவனிககப்படமாட்டாது. மேற்சொல்லிய ஒவ்வொரு குத்தகைக்கும் வெவ்வேறு கேள்விப்பத்திரம் அனுப்பப்படவேண்டும.

3. ஒப்புக்கொள்ளப்படும் கேள்விக்காரன் கேள்வித் தொகையிற் பத்திலொன்று காசாய் உடனே கட்டவேண்டும். உத்தம தேசாதிபதியவர்களால் கேள்வி ஏற்கப்பட்டால் கேள்விக்காரன் தனக்கு அதைப்பற்றிய அறிவித்தல் கிடைத்த 20 நாட்களுள் அரைவாசித் தொகைக்கு அனுமதி பெற்ற ஆதனப் பிணையேனும் காசாய் கேள்வித் தொகையில் மூன்றிலொரு பங்கு பிணையேனும் கட்டவேண்டும்.

4. கவண்மேந்து ஏசண்டர் விற்பனவிலென்று தீர்மானிக்கிற பிரகாரம் பாதைகளைப் பழுதுபார்ப்பதற்கு வேண்டிய பணத்தைப் பிணையாகக் கேள்விக்காரன் கட்டவும் வேண்டும்.

5. முடிக்குறிய தரணி பிணையாகக் கொடுபடும் உறுதி முதலியவைகளைப் பரிசோதிப்பதற்கும் ஒப்பந்த உறுதி போடுவதற்கும் உரிய செலவு ஆதனங்களை விலைமதித்தல் முதலியவைகளால் வரும் செலவும் பிணை உறுதிக்கு ஒட்ட வேண்டிய முத்திரைச் செலவும் கேள்விக்காரன் கட்ட வேண்டும்.

6. பிணையாகக்கொடுபடும் உறுதிகளிலுள்ள ஆதனங்கள் ஈடு முதலியவைகட் குட்படவில்லையென்று கேள்விக்காரன் தன் செலவில் நிலப்பதிவு கச்சேரிலிருந்து ஓர் பத்திரம் பெற்றுக் கொடுக்கவேண்டும்.

7. யாழ்ப்பாண ஏசண்டரிம் தேள்வையான மேலதிகமான விபரங்கள் பெற்றுக்கொள்ளளாம். போதிய கேள்விகள் கேட்கப்படாத குத்தகைகள் கேள்விப்பத்திரங்கள் திறந்து பரிசோதிக்கப்பட்டவுடன் அன்றையத்தினமே பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

8. எந்தக் கேள்விப்பத்திரத்தையும் நியாயஞ்சொல்லாது மறுக்க முழு உரித்தும் கவண்மேந்து ஏசண்டு அவர்களுக்கு உண்டு.

ஈ. டீ. டைசன்,
கவண்மேந்து ஏசன்று.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1934 ம் ஆண்டு ஆனிமீ 29 ந உ.

---

## சுப்பிறீங்கோட்டு அறிவித்தல்.

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : கண்டி நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் வதுளை டிஸ்திறிக்கைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1935 ம் ஆண்டு ஆவணி மாதம் 1 ந் திகதியாகிய வியாழக்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.—ஆதலால் அவ் விசாரணையிற் காரியசருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.

இங்ஙனம்,
டீ. ஜே. மெண்டிஸ்,
ஊவா பிஸ்காலுக்காக.

வதுளைப் பிஸ்கால் கந்தோர்,
1935 ம் ஹு ஆடிமீ 2 ந் உ.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.